2020 செப்டம்பர் 15] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பில் என்ன கேட்டிருக்கிறார்கள் என்றால், ‘சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்’ என்று கேட்டிருக்கிறார்கள்:

“கொரோனா பேரிடரின் காரணமாக நிதிநிலை அறிக்கையில், அதாவது 2020–2021 ஆம் ஆண்டு அறிவித்த திட்டங்களை மறுபரிசீலனை செய்து நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக” விவாதிப்பது குறித்து ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இதே கருத்தை வலியுறுத்தி, அவர் தனக்கு இங்கே யாரும் பதில் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னதனால், கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்தும், அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பது குறித்தும்தான் இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கொரோனா உட்பட மற்ற திட்டங்களுக்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதனை நாளை விரிவாகச் சொல்லவிருக்கிறேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு சார்பாக கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கப்பட்டன என்பது குறித்து சொல்லக் கூடாத ஒரு நிலையை உருவாக்குவது மாதிரி நீங்கள் பேசினீர்கள். (குறுக்கீடு) எப்படியாவது தடுத்து நிறுத்தலாம் என்று பார்க்கிறீர்கள். அது முடியாது.

கொரோனா சம்பந்தப்பட்டவை குறித்து மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் கொள்முதல் குறித்து மட்டும் பேசுகிறேன். மற்றவற்றை நாளைக்குச் சொல்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் கொள்முதல்களுக்காக 830.60 கோடி ரூபாய், மருத்துவக் கட்டுமானப் பணிகளுக்காக 147.10 கோடி ரூபாய், கூடுதலாக நியமிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஏற்கெனவே உள்ள பணியாளர்களுக்கான உணவு மற்றும் இதர ஊக்க செலவினங்களுக்காக 243.50 கோடி ரூபாய், கொரோனா தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2020 செப்டம்பர் 15*

பொதுவான செலவாக 638.85 கோடி ரூபாய், மருத்துவமனையில் தனிமைப்படுத்துதல் செலவினங்களுக்காக 262.25 கோடி ரூபாய், வெளி மாநில தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 143.62 கோடி ரூபாய், பொது விநியோகத் திட்டம்மூலம் இலவசமாக பொருட்கள் வழங்கி வருவதனாலும், ரேஷன் அட்டைதாரர்களுக்கும், நிருபர்கள், மீனவர்கள், திருநங்கைகள், பழங்குடியினர், வியாபாரிகள், சீர்மரபினர், நரிக்குறவர், பூசாரிகள், உலமாக்கள், பட்டாசுத் தொழிலாளர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், நூறுநாள் வேலை திட்டப் பணியாளர்கள், தெருவோர வியாபாரிகள், மாற்றுத்திறனாளிகள், முடிதிருத்துவோர் நலவாரிய உறுப்பினர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பண உதவியாக மொத்தம் 4,896.05 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அண்ணன், நன்றாகக் கேளுங்கள், ஆக மொத்தம், கொரோனா நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 7,167.97 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினால் செலவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிப்படைந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்து, வளர்ச்சியைப் பெருக்குவதற்கு முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் முனைவர் சி. ரங்கராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது அம்மா அவர்களுடைய அரசு. அந்தக் குழு பல்வேறு துறை சார்ந்த பரிந்துரைகளை விரைவில் சமர்ப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், செலவினங்களை மறுசீராய்வு செய்து அவற்றை வரவினங்களுக்கு ஏற்ப கட்டுப்படுத்துதல் மிகவும் அவசியமாகும். அரசின் மொத்த வருவாய்ச் செலவினங்களில் 55 சதவிகிதம் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல் போன்ற ஏற்கெனவே பொறுப்பேற்கப்பட்ட செலவினங்களுக்காகவே சென்றுவிடுகின்றன. மேலும் 39 சதவிகிதத் தொகையானது, சமுதாயத்தின் அடித்தட்டில் உள்ள மக்களுக்குத் தேவைப்படும் அவசியமான மானியங்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மாநில போக்குவரத்துக் கழகங்கள், கூட்டுறவு அமைப்புகள் போன்ற அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கான நிதியுதவி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு நிதி மற்றும் மத்திய அரசின் பெரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. எனவே, செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருசில வாய்ப்புகளே உள்ளன.

2020 செப்டம்பர் 15] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழ்நாட்டில் செலவுகளைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் ஆணைகளை ஒட்டி, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 1–1–2020, 1–7–2020 மற்றும் 1–1–2021 ஆகிய மூன்று அரையாண்டு அகவிலைப்படி தவணைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நடப்பு ஆண்டு 2020–2021–ல் 4,947.23 கோடி ரூபாய் சேமிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரசுப் பணியாளர்கள் ஈட்டிய விடுப்பினை சரண் செய்து பணப்பயன் பெறுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்ததன்மூலம் நடப்பாண்டில் 2,448.82 கோடி ரூபாய் செலவினம் மிச்சப்படும்.

கடந்த காலங்களிலும் மிகக் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்ட போதெல்லாம், திட்டம் சாராத செலவினங்களைக் குறைத்தல், அகவிலைப்படி உயர்வினை முற்றிலுமாகத் தவிர்த்தல் மற்றும் தள்ளிவைத்தல் மற்றும் பிற படிகள்/சலுகைகளை நிறுத்திவைத்தல் போன்ற செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியது. மேலும், அரசாணை எண் 249-ன்மூலம் அலுவலகச் செலவுகள் மற்றும் ஏனைய சில்லரைச் செலவினங்கள், விளம்பரச் செலவினங்கள், விருந்தோம்பல் மற்றும் கேளிக்கைச் செலவுகள், மோட்டார் வண்டி வாங்குதல், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குதல், பயிற்சி மற்றும் அச்சிடல் செலவுகள், கணினி மற்றும் துணைப் பாகங்கள் வாங்குவதற்குண்டான செலவுகள், பயணப்படிகள் மற்றும் தினப்படிகள், விடுப்புப் பயணச் சலுகைகள் ஆகிய செலவின வகைப்பாடுகளில் செலவு குறைப்பு நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்றினால் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினங்கள் துணை நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. திருத்திய மதிப்பீடுகள் வெளியிடப்படும்பொழுது நிதிநிலை அறிக்கையில் உள்ள சம்பந்தப்பட்ட தலைப்புகளில் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படும். வருவாய் வரவினங்களின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதால், ஏதேனும் மாற்றம் இருப்பின், உடனடியாக வருவாய் கணிப்புகள் மாற்றியமைக்கப்படும். அரசு செயல்படுத்திவரும் நலத் திட்டங்கள், மக்கள் நலனுக்காக எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2020 செப்டம்பர் 15*

பொருளாதாரம் நலிவுற்றிருக்கும்பொழுது, அரசு செலவு செய்தாலொழிய, வேறு யாராலும் செலவு செய்து பொருளாதாரத்தை மீண்டெழச் செய்ய இயலாது. ஆகவே, தொடர்ந்து மக்கள் நலச் செலவினங்களைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியுடன் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், அமைச்சர் பெருமக்களின் அறிவிப்புகள், விதி 110–ன்கீழ் சட்டசபையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தும்.

மேற்கூறிய காரணங்களால், 2020–2021 ஆம் ஆண்டிற்கு திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு தாக்கல் செய்ய வேண்டும் என்று முன்வைக்கும் கோரிக்கை அவசியமில்லாதது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

பிற்பகல் 1–20

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) வெளியேற்றப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மீண்டும் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தங்களுடைய தீர்ப்புதான் இறுதியானது என்பதை நான் பலமுறை ஒத்துக்கொண்டிருக்கிறேன், சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்குக்கூட காங்கிரஸ் நண்பர்கள் தங்கள் மேசையின் அருகில் வந்து நின்றதும், தாங்கள் ஒரு நடவடிக்கை எடுத்து இன்றைக்கு சபையிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டீர்கள். அந்தத் தீர்ப்பிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், அந்த உத்தரவு இன்றைக்கு மட்டும் பொருந்தும் என்று தாங்கள் அறிவித்தால் நாளைக்கு அவர்கள் சபையில் கலந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். இருப்பதே நாளைக்கு ஒருநாள் என்பதால் அருள்கூர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.